**ஆ. நோய் மேலாண்மை**

| நோய்களின் பெயர் | கட்டுப்படுத்தும் முறை |
|---|---|
| அடித்தண்டு அழுகல் நோய் *கேனோடெர்மா லுசிடம்* | **உழவியல் முறை**<br>வருடத்திற்கு மரம் ஒன்றிற்கு 200 கிராம் சூடோமோனாஸ் ஃபுளூரசண்ஸ் மற்றும் ட்ரைக்கோடெர்மா விரிடி போன்ற நுண்ணுயிரிகளை விடல். மரம் ஒன்றுக்கு 200 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் மற்றும் 200 கிராம் டிரைகோடெர்மா விரிடி இடுதல்<br>மரம் ஒன்றுக்கு 50 கிலோ தொழுவுரம், 200 கிராம் *பாஸ்போபாக்டீரியா* மற்றும் 200 கிராம் *அசட்டோபாக்டர்* இடுதல்<br>வயலில் பசுந்தாள் உரப்பயிர்கள் வளர்த்து பின்பு உழுது விடுதல்<br>**இரசாயனம்**<br>வேப்பம் புண்ணாக்கினை மரம் ஒன்றுக்கு 5 கிலோ இரசாயன உரமுடன் சேர்த்து இடுதல்<br>ஆரியோபஞ்ஜீன் 2 கிராம் மற்றும் 1 கிராம் தாமிர சல்பேட் அல்லது டிரைடிமார்ப் 2 மில்லியை 100 மிலி தண்ணீருடன் கலந்து வேர்மூலம் செலுத்துதல் (பென்சில் அளவு தடிமனுள்ள வேரை தேர்வு செய்து சாய்வாக வெட்ட வேண்டும். பின்பு மருந்து கரைசலை பாலீத்தீன் பை அல்லது கண்ணாடி புட்டிகளில் எடுத்து வெட்டப்பட்ட வேர் நுனி முழுவதும் நனையுமாறு வைக்க வேண்டும்).<br>40 லிட்டர் 1 சத போர்டோ கலவையை மரத்தைச் சுற்றி 1 மீ அகலத்திற்கு மண்ணில் ஊற்ற வேண்டும். |
| குருத்து அழுகல் நோய் *பைட்டோபத்தோரா பால்மிவோரா* | குருத்து பகுதியில் பாதிக்கப்பட்ட பகுதியை வெட்டி எடுத்துவிட்டு போர்டோ பசை பூச வேண்டும் அல்லது 1 சதம் போர்டோ கலவை பருவமழைக்கு முன் குருத்து பகுதி நனையுமாறு தெளிக்க வேண்டும். |
| சாறு ஒழுகல் நோய் *தேவிலியாப்சிஸ் ஃபாரடோக்சா* | தண்டுப் பகுதியில் சாறு ஒழுகும் இடங்களை வெட்டி எடுத்துவிட்டு வெட்டப்பட்ட பகுதியில் போர்டோ பசை தடவவேண்டும். |
| இலை கருகல் நோய் லேசியோடிப்ளோடியா தியோபிரமே | 1 சதம் போர்டோ கலவை அல்லது 0.25 சதம் காப்பர் ஆக்ஸி குளோரைடு அல்லது 0.2 சதம் இண்டோபில் எம் 45 தெளிக்க வேண்டும் (பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில்). |

**அ. சத போர்டோ கலவை தயாரிக்கும் முறை**

*400 கிராம் தாமிர சல்பேட் 20 லிட்டர் தண்ணிருடன் கரைத்து கொள்ளவேண்டும். இதேபோல் வேறு பாத்திரத்தில் 400 கிராம் சுண்ணாம்பை 20 லிட்டர் தண்ணீருடன் கலந்து கொள்ளவேண்டும். பின்பு தாமிர சல்பேட் கரைசலை சுண்ணாம்பு கரைசலுடன் சீராக நன்கு கலக்கவேண்டும். கரைசலை தயாரிக்க மண்ணால் ஆன அல்லது மரத்தாலான பாத்திரத்தை மட்டுமே உபயோகிக்க வேண்டும். உலோகத்திலான பாத்திரங்களை உபயோகிக்க கூடாது. கலவை சரியான விகிதாச்சாரத்தில் கலந்துள்ளதா என்பதை அறிய நன்கு தீட்டப்பட்ட இரும்பு கத்தியை ஒரு நிமிடம் கரைசலில் வைக்கவேண்டும். கத்தியில் துருபோன்று படிவு இருந்தால் சிறிதளவு சுண்ணாம்பு கரைசல் சேர்க்கவேண்டும். சுண்ணாம்பு கரைசலை கத்தியில் துரு படியாது இருக்கும் வரை சேர்க்கவேண்டும்.*

**ஆ. போர்டோ பசை தயாரிக்கும் முறை**

*200 கிராம் தாமிரசல்பேட்டை ஒரு லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். பின்பு வேறு பாத்திரத்தில் 200 கிராம் சுண்ணாம்பு ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து கொள்ள வேண்டும். பின்பு மூன்றாவது பாத்திரத்தில் இவ்விரண்டு கரைசலையும் கலந்து பசை போன்று உபயோகித்து கொள்ளலாம்.*